செய்தி வெளியீடு எண்:795 நாள்:27.09.2021

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், புது தில்லியில் உள்ள ஷ்ரம் சக்தி பவனில் இன்று (27.09.2021) காலை, ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத் துறையின் அமைச்சர் திரு.பூபேந்தர யாதவ் அவர்களை தமிழக அரசின் வனத்துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன் அவர்கள் மற்றும் தமிழக அரசின் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறையின் முதன்மைச் செயலர் திருமதி சுப்ரியா சாகு, இ.ஆ.ப., ஆகியோர் சந்தித்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு தமிழக வனப்பரப்பினை 23.98 சதவீதத்திலிருந்து 33 சதவீதமாக உயர்த்த தேவையான நிதி உதவி, சென்னை பள்ளிக்கரணை சதுப்பு நில மேம்பாட்டிற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு, தமிழக புலிகள் காப்பகங்களுக்குத் தேவையான நிதி ஒதுக்கீடு, தமிழ்நாட்டில் மனித வன விலங்கு மோதல்களைக் கையாள்வதற்குத் தேவையான நிதி, யானைகள் வழித்தட மேம்பாட்டிற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு போன்றவைகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. இவை குறித்து கனிவுடன் பரிசீலிப்பதாக ஒன்றிய அமைச்சர் அவர்கள் உறுதியளித்தார்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9